★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

பக்ரா அணையில் வேலை நடக்கும் வேகம்!

வடநாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் வேகம், எவ்வளவு? போட்டி போட்டுக் கொண்டு வேலைகள் முடிக்கப் படுகின்றன!

ஒரே நாளில் 2,901 கனகஜம் கான்கிரீட் கொட்டி, பக்ரா அணையில் வேலை நடைபெறுகிறதாம்! இதுவரை இவ்வளவு பெரும் அளவு கான்க்ரீட் ஒரே நாளில் கொட்டப்பட்டது இல்லையாம்!

கடந்த சூன் திங்களில் மட்டும் 52,504 கனகெஜம் கான்கிரீட்டை அணைக்கட்டு விழுங்கியுள்ளதாம்!

இதுவரை பக்ரா அணையில் மட்டும் 12,66,857 கன கெஜம் சிமெண்ட் காங்கிரீட் கொட்டப்பட்டிருக்கிறதாம்!

மலர் 4] சென்னை: ஆடி 2உ செவ்வாய் (17—7—56) ★ ★ வெளியீடு: ஆடி 3உ புதன் (18—7—56) [இதழ் 28

'அன்று—வல்லரசாக வாழ்ந்தோம்; இன்று—தேரையாகத் தேய்ந்து விட்டோம்'

'வாழ்விழந்தாலும் போர்க் குணம் இழந்தோமில்லை'

'திராவிட நாடு கோருவது அற்ப ஆசைகளுக்காக அல்ல'

'நமது பேச்சு—மூச்சு—அசைவு எல்லாம் திராவிடம் என்றே ஒலிக்கின்றன'

மும்முனைப் போராட்ட நினைவு நாளில்

மு. கருணாநிதி முழக்கம்

"இன்று, ஜூலை 15! இன்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தி முடிந்தும் முடியாமலிருக்கிற மும்முனைப் போராட்டத்தின் நினைவு நாளை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

"தி. மு. கழகம், தன்னுடைய இலட்சியங்களை முன் வைத்து, மூன்று முனைகளில் ஒரு பெரும் போராட்டம் நடத்தியது—1953-ம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 15-ம் நாளன்று!

"மூன்று—என்ற மூன்றெழுத்துச் சொல், தமிழ் நாட்டில் ஒரு தனிப்பெருமை வாய்ந்த சொல்லாக மாறிவிட்டிருக்கிறது.

"தமிழ் நாட்டில் மூன்று வேந்தர்கள்—சேரன், சோழன், பாண்டியன் என்ற பரம்பரையினர் ஆண்டிருக்கின்றனர்.

"அவர்கள் ஆண்ட நாட்டினைச் சுற்றி மூன்று கடல்கள் இருந்திருக்கின்றன—இருக்கின்றன.

"மூன்று மன்னர்களுக்கும் மூன்று கொடிகள்—வில், கயல், புலி—என்று!

"அந்த மன்னர்கள் வளர்த்த தமிழ் மூன்று—இயல், இசை, நாடகம்—என்று!

"அந்தத் தமிழகத்தின் விடுதலைக்காக எழுந்துள்ள கட்சியும், மூன்றெழுத்துக்களாலானது—'தி.' 'மு.' 'க.'—என்று!

"அந்தக் கட்சிக்குக் கிடைத்த பெருமைக்குரிய தலைவர் அண்ணா—அந்தப் பெயரும் மூன்றெழுத்துக்களாலானது!

"இப்படி—மூன்று, மூன்று—என்ற சொல், தமிழகத்தின் பெருமைக்குரிய சொல்லாக விளங்குகிறது.

"அந்தப் பெருமைக்குரிய வகையில்தான், தி. மு [illegible] நடத்திய போராட்டமு[illegible], மும்முனைகளில் நடை[illegible]

"அந்தப் போராட்டத்தில், கள[illegible]—'வடு'க்கள் பல பெற்ற வீரர்கள் [illegible]—விழுப்புண் பல பெற்றனர்.

"அதுபோன்ற விழுப்புண்களை—தழும்புகளைத் தடவிக் கொண்டே, 'அவை மீண்டும் ஓர்முறை நம் உடம்பிலே விழாதா? மீண்டும் அதுபோன்ற விழுப்புண்களை—தழும்புகளை ஏற்கிற போராட்டங்கள் வாராதா?' என்று, கண்களில் கனல் பொங்க வீரக்குரல் எழுப்பிடுவோர், கழகத்தில் இன்று ஏராளம்! ஏராளம்!

"போராட்டம்—போர், போர்—என்ற சொல், கழகத்தவருக்கு பாயசத்தைவிட இனிப்பதாக இருக்கிறது.

"இப்படிப்பட்ட போர்க்குணம் படைத்த வீரர்கள் நிரம்பிய கழகத்தைப் பற்றித்தான், இன்றோ நாளையோ ஒழியப் போகிற—சிரஞ்சீவித் தன்மையற்ற காங்கிரஸ் மந்திரிசபையின் முதல்வராம் காமராசர், செல்லுமிடங்களில் எல்லாம், இழித்தும் பழித்தும் பேசிவருகிறார்.

"திருச்சியில் மாநாடு நடத்தினோம்; பிறகு—அந்தப் பெருமைக்குரிய நிகழ்ச்சிக்குப் பிறகு, நமது கழகம், இந்திய அரசியலில் எத்தகு இடம் பெற்றுவருகிறது என்பதை நாம் விளக்கி வரும் நேரத்தில், நமது இலட்சியம் குறித்து—'திராவிட நாடு, திராவிடருக்கே' என்று துந்துபி முழக்கிவரும் நேரத்தில்—'இந்தியாவிலிருந்து நமது தாயகம் - திராவிடம், துண்டாடப்பட வேண்டும்; தனியாகப் பெற வேண்டும்' என்று பேசிவரும் நேரத்தில்தான், இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டித நேரு, பிரிந்துகிடக்கிற மேற்கு ஜெர்மனியையும், கிழக்கு ஜெர்மனியையும் ஒன்றுபடுத்துவது பற்றி ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று செய்திவருகிறது.

"இங்கே நாம், 'இந்தியா என்ற அரசியல் அமைப்பிலிருந்து இந்தத் தென்னாடு—தென்னகம்—திராவிடம் பிரிந்துவிடவேண்டும்; தனியாகி, சுதந்திரமுடன் வாழ வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறோம்.

"இந்த இலட்சியத்திற்காக, நம்மிலே 5,000 பேருக்கு மேல் சிறைப்பட்டிருக்கிறோம்; ஆறு உயிர்களைத் தத்தம் செய்திருக்கிறோம்; எண்ணற்ற அடக்குமுறைகளைத் தாங்கியிருக்கிறோம்; இரத்தத்தைச் சிந்தியிருக்கிறோம்; ஒரு நாட்டின் விடுதலைக்குத் தேவையான அத்தகைய இரத்தத்தைச் சிந்தியிருக்கிறோம்—'நமது நாடு, தனிநாடாக வேண்டும் என்பதற்காக! இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிரிந்துவிட வேண்டும் என்பதற்காக!!

"இதுபற்றி ஏதும் பேசாமலிருக்கிற நேரு பண்டிதர், பிரிந்து கிடக்கிற ஜெர்மனிகளை ஒன்றுபடுத்துவதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.

"திராவிட முன்னேற்றக் கழகம், 'திராவிட நாடு தனி நாடாக அமையவேண்டும்; அந்த நாட்டில் சுதந்திரத் தனியரசு

(4-ம் பக்கம் பார்க்க)

'சாதிமுறை ஒழிய வேண்டும்'

பம்பாய் நீதிபதி கருத்து

"இந்திய சமுதாயம், சாதி முறை, வகுப்பு வேற்றுமைகள் என்ற நோயிலிருந்து விடுதலை பெற்றாலன்றி, எந்த வித சமூக சீர்திருத்தமும் சாத்தியப்படாது,"

என்று, பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதி கஜேந்திர கட்கார், பம்பாய் கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்.

ரூ. 10 கோடி செலவில் மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை?

இந்தியப் பேரரசு இறுதி 'சர்வே' நடத்தும்?

சென்னை, ஜூலை 16—ரூ. 10 கோடி செலவில் மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முன்னேற்பாடாக சேலம் மாவட்டம் சேர்வராயன் மலையில் அலுமினிய கனியைத் தோண்டி எடுப்பது பற்றி விரைவில் இந்திய சர்க்கார் இறுதி 'சர்வே' நடத்தப் போகிறார்களாம்!

இந்தப் பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய அலுமினியத்தின் அளவையும், 'தர'த்தையும் நிர்ணயிப்பதே இந்த 'சர்வே'யின் முக்கியமான நோக்கமாம்!

மற்றும், எந்த அம்சங்களைக் கொண்டு அலுமினியத் தொழிற்சாலையின் இறுதி அமைப்பையும், அளவையும் நிர்மாணிக்கவேண்டும் என்பது பற்றியும் பரிசீலனை நடைபெறுமாம்!

சர்க்கார் துறையில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டிய இடத்தை அமெரிக்க நிபுணர்கள் நேரில் சென்று தேர்ந்தெடுத்துள்ளதாகச் சமீபத்தில் மத்திய வர்த்தக—கைத்தொழில் மந்திரி சென்னைக்கு வருகை செய்திருந்தபோது அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அலுமினிய 'மாதிரி'களைப் பரிசோதித்த பின்னர்தான் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றி இறுதி முடிவு செய்யப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

'எல்லைத் தகராறுகளைக் கவனிக்க கமிஷன் வேண்டும்'

பொறுக்குக் குழு உறுப்பினர் கருத்து

புதுடில்லி, ஜூலை 16—

மாநில சீரமைப்பு மசோதாவைப் பரிசீலனை செய்த கூட்டுப் பொறுக்குக் குழுவில் இடம்பெற்றிருந்த எதிர்க் கட்சி உறுப்பினர் பலர், தங்கள் கருத்து வேறுபாடுகளை எடுத்துரைக்கும்போது, பல மாநிலங்களுக்குமிடையில் உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைக்க ஒரு எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர் என்று தெரியவருகிறது.

அது போன்ற ஒரு குழு, 'மாநிலங்களின் முடிவான எல்லைகளை—மக்கள் தொகைக் கணக்கு, மற்றும் இதர விபரங்களை வைத்துக்கொண்டு நிர்ணயித்துவிட வேண்டும்' என்றும் ஒரு உறுப்பினர் கருத்து அறிவித்திருக்கிறா[illegible] எனத் தெரியவருகிறது.

ஒரு மாநிலத்திற்கு[illegible]ருன் [illegible]றிற்கும் [illegible] தகரா[illegible] [illegible]லப் பிரதேசங்[illegible] [illegible]ருப்பனவற்றில் சுமார் [illegible] கோடி மக்கள் வரை வசிக்கின்றனர் என்றும், இந்தப் பிரதேசத் தகராறுகள் தீர்க்கப்படாவிட்டால், விளைவுகள் விபரீதமானவையாக இருக்கும் என்றும் டாக்டர் லங்காசுந்தரம தனது குறிப்பில் எழுதியுள்ளாராம்.

இப்போதுதான் கண் திறக்கிறது! காது கேட்கிறது!!

சென்னை, ஜூலை 16—மாநிலம் முழுவதிலும் கிடைக்கக் கூடிய இயற்கை வளம் பற்றி கண்டறிவதற்காக, ஒரு பூகர்ப்ப ஆராய்ச்சி நடத்துவதென சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாக நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

"இதுபோன்ற ஒரு 'சர்வே' நடத்தவேண்டிய அவசியம் மிக இருக்கிறது; இது, புதிய தொழில்கள் துவங்குவதற்கு சர்க்காருக்கு உதவக்கூடியதாகும். தென்னாட்டில் புதிய தொழில்கள் வேண்டுமென்பதற்காக இப்போது நாட்டில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பது நாம் அறிந்ததே" என்றும் அவர் கூறினாராம்.

பள்ளி ஆசிரியர்களுக்கு விவசாயப் பயிற்சி?

விவசாயம் உள்பட ஏதாவது ஒரு தொழிலில் தேர்ச்சி பெறுமாறு, உள்ளாட்சிக் கழகப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனராம்!

உ. பி. மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

லக்னோ, ஜூலை 16—உத்திரப் பிரதேச காங்கிரஸ் மந்திரி சபை மீது சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஒருவர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்திருக்கிறார்.

தனது முதலாளித்துவக் கொள்கைகளை ஒட்டி, காங்கிரஸ் சர்க்கார் வரி விதிப்பில் கையாளும்—குறிப்பாக, விற்பனை வரி விதிப்பில் கையாளும் கொள்கையை எதிர்ப்பதற்காகவே இந்தத் தீர்மானம் என்று, அந்த சோஷலிஸ்டு உறுப்பினர் பேசியிருக்கிறார்.

தீர்மானத்தின் வாசகங்கள், சபையில் வாசிக்க முடியாத அளவுக்குத் தவறாக இருப்பதாகவும், மறுநாள் தீர்மானம் குறித்து விவாதிக்கலாம் எனவும் சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

நம் நாடு

சென்னை 17—7—56 செவ்வாய்

சென்னை சர்க்காரின் பொறுப்பற்ற போக்கு!

'தொழிலாளர்களுக்கும், குறைந்த வருமானமுடையவர்களுக்கும் வீடுகட்டித் தருவதற்கென முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 38 கோடியை சென்னை சர்க்கார் உபயோகித்துக்கொள்ளத் தவறிவிட்டது வருந்தற்குரியதாகும்,'' என்று, இந்தியப் பேரரசின் தொழிலாளர் துறை அமைச்சர் கந்துபாய் தேசாய், கடந்த திங்கள் இறுதியில், கோயில்பட்டி லாயல் நெசவாலைத் தொழிலாளருக்கான 'காலனி' ஒன்றுக்குக் கால்கோள் விழா நடத்திவைக்கும்போது குறிப்பிட்டதாகச் செய்தி வந்தது.

"டில்லி மந்திரி குறிப்பிட்டபடி ஒதுக்கப்பட்ட தொகை 38 கோடி ரூபாய் அல்ல; 80 இலட்சம் ரூபாய் மட்டுமேதான்,"

என்று, சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம், கடந்த கிழமையில் மறுப்புரை வழங்கினர்.

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டுமின்றி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இதர சிறிய—பெரிய அபிவிருத்தித் திட்டங்களிலும் தென்னாட்டிற்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது; ஏற்கனவே தொழில்—விவசாயத் துறைகளில், தென்னாட்டைவிட பல மடங்கு வளர்ந்து முன்னேறியுள்ள வடநாட்டின் அபிவிருத்திக்கு, வெகுவாகப் பின்தங்கிக் கிடக்கும் தென்னாட்டைவிடப் பல மடங்கு பணம் செலவழிக்கப்படுகிறது; வடநாடு வளரவும் தென்னாடு தேயவுமான வகையில், டில்லியின் ஏகாதிபத்திய நோக்கம், இதுபோன்று அநீதிகளைத் தொடர்ந்து இழைத்து வருகிறது'—என்ற தென்னாட்டு மக்களின் ஒருமுகப்பட்ட குற்றச்சாட்டிற்கு, நேர்மையான பதில் தர இயலாது நடுங்கிக் கிடக்கும் டில்லி ஆட்சியாளர்கள், தங்கள் ஏகாதிபத்திய நோக்கத்தைத் திரையிட்டு மூட முயற்சித்துத் தோல்வி கண்ட நிலையில், இப்போது, 'குறுக்கு வழி' தேட நினைக்கின்றனர்! உலகத்தின் கண்ணில் மண் தூவ எண்ணுகின்றனர் போலும்!

பொறுப்புள்ள ஒரு மந்திரி, அதுவும் தொடர்புடைய தொழிலாளர் இலாகா மந்திரி, 'ரூபாய் முப்பத்தெட்டுக் கோடி தந்தோம்; செலவு செய்யாது ஒழித்தனர்', என்று முழுப் பொய் பேசுவது, எந்த நோக்கத்தோடு?

'ஏதோ, நியாயமான அளவு நிதி ஒதுக்கித் தரவில்லை என்று குறைபடுகிறீர்களே! குற்றஞ் சாட்டுகிறீர்களே! இதோ பாருங்கள்—ஒதுக்கிய தொகையையே செலவிடாத உங்கள் சர்க்காரின் போக்கினை!' என்று கூறிவிடும் தாங்கள் இழைத்த அநீதியை மூடிமறைக்கும் நோக்கத்திற்காக அல்லாது, வேறு எதற்காக என்று கேட்கிறோம். ஏகாதிபத்திய வெறி, இதுபோன்று, கீழ்த்தரமான புளுகையும் கூறுவதற்குத் துணியுமாறு தூண்டுகிறது போலும்!

'ஒதுக்கப்பட்ட தொகை முப்பத்தெட்டுக் கோடியல்ல; எண்பதே இலட்சம்தான்' என்று மறுத்துரைத்த இந்த மாநில நிதி மந்திரி, வேறொரு தகவலையும் தந்திருக்கிறார்.

"ஒதுக்கப்பட்ட தொகையான எண்பது இலட்சத்தில், பதினெட்டு இலட்சத்தை மட்டுமே பயன்படுத்திக்கொள்ள முடிந்தது," என்பதுதான், அந்தத் தகவல்.

எஞ்சிய 62 இலட்சத்தையும் பயன்படுத்தாது வீணடித்த குற்றத்திலிருந்து தப்ப, அதற்குப் பொறுப்பாளியான இந்த மாநில சர்க்காரின் சார்பில் நிதி மந்திரி கூறும் சமாதானம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை.

'தொழிலாளருக்கும், குறைந்த வருமானமுடையவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர இடங்கள் கிடைப்பதில் கஷ்டமாயிருக்கிறது,' என்பதே மந்திரி கூறுகிற சமாதானமாகும்.

பம்பாய் மாநில சர்க்கார், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும், செலவிட்டு, வீடு கட்டும் திட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள். சென்னையைவிட நெருக்கடி மிகுந்த பம்பாயில், தொழிலாளருக்கு வீடுகள் அமைத்துத் தருவதற்கு இடம் பெற முடிந்திருக்கும்போது, சென்னையில், 'வீடு [illegible] இடம் இல்லை' என்று கூறுவது நொண்டிச் சமாதானமேயாகும்.

பலவகைத் தொழிலாளர்களும், குறைந்த வருமானமுடைய நடுத்தர மக்களும், சென்னை போன்ற பெரும் நகரங்களில் மட்டுமின்றி, சிறிய தாலுகா நகரங்களில் எல்லாம் கூட குடியிருப்பதற்கு உகந்த வீடுகளின்றிப் படுகின்ற அவதி சொல்லுந்தரமன்று. அந்த அவதியைத் துடைப்பதில் சென்னை சர்க்காருக்குக் கிஞ்சிற்றும் அக்கரை இருந்ததாகக் கொள்வதற்கு, இந்த விபரங்கள் இடம் வைக்கவில்லை.

மேலும், இதுபோன்று, டில்லி ஒதுக்கித் தரும் சிறுசிறு தொகைகளைக்கூட இந்த மாநில சர்க்கார் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாதுவிடுவது, டில்லி அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைக்கும் அநீதிக்கு மறைமுகமாகத் துணைபுரியவே உதவும்!

இதுபோன்ற பொறுப்பற்ற போக்கினை, மாநில மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர் என்று சர்க்கார் தெரிந்துகொள்ள, வரப்போகும் பொதுத் தேர்தல் பயன்பட வேண்டும்.

அந்தகர்கள்!

பிச்சை எடுப்பதையே விரும்புகின்றனராம்!

பம்பாய், ஜூலை 14—

"ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் பம்பாய் நகரில் ரூ 30 முதல் ரூ. 300 வரை, மாதம் ஒன்றுக்கு சம்பாத்தியமாகப் பெறுகிறான்,"

என்று தேசியக் குருடர் சங்கம் கூறியிருக்கிறது.

"இந்த 'தொழிலை' விட்டுவிட்டு, ஒரு கௌரவமான—இலாபம் தரக்கூடிய தொழிலை மேற்கொள்ளுமாறு இந்தப் பிச்சைக்காரர்களைத் தூண்டுவதற்குக் கடினமாயிருக்கிறது. காரணம், பிச்சை எடுப்பதில் சுலபமாக வருமானம் கிடைப்பதேயாகும்,"

என்று அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

இந்தச் சங்கத்தவர், சமார் 50 குருடர்கள் தங்கி, பலன் தரும் தொழில்களில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் 'குருடர் இல்லம்' ஒன்றைத் திறந்துள்ளனர்.

திட்டம் பெரிது!

நாட்டில் பரவலாக அமுலாக வழி காண வேண்டுமே!

புதுடில்லி, ஜூலை 16—

வேலை செய்யும்போது காயங்கள் ஏற்பட்டு கை, கால்களை இழப்பவர்களுக்கு தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் செயற்கை கை, கால்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வகை செய்வதென்று அரசாங்க இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் கூட்டம் முடிவு செய்திருக்கிறது

இதுவரையில், இன்சூர் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் கை, கால்களை இழந்தால் செயற்கைக் கை கால் வழங்குவதற்கு வசதி செய்யப்படவில்லை

காயமடைந்தவர்கள், பெரும் அளவுக்கு வேலை செய்ய செயற்கை உறுப்புகள் கொடுக்கப்படும்.

பூனாவில் உள்ள இராணுவ செயற்கை உறுப்பு நிலையத்தில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

செயற்கை உறுப்புகளுக்கான செலவு, பூனாவுக்குச் செல்ல போக்குவரத்து செலவு, தங்குவதற்கான செலவு ஆகியவற்றை அரசாங்கமே மேற்கொள்ளும்.

முடமானவர்களுக்கு 'சிறு பென்ஷன்'களைச் சேர்த்து ஒரே [illegible]வயில் மொத்தமாக வழங்குவதற்கு [illegible] செய்யும் முறையைப் பிரசுரிக்க [illegible]ப்பொரேஷன் முடிவு செய்தது.

சிறு தொல்லைகளு[illegible] [illegible]டத்தின்கீழ் அளிக்கப்படும் பென்ஷன்'கள், போதிய அளவுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவில்லை; மொத்தமாகக் கொடுக்கப்படும் 'பென்ஷன்' முடமானவர்களுக்கு புனர் வாழ்வளிக்க உதவும்.

சங்கரனின் தரிசனம்பெற!

கழுத்தை அறுத்துக் காணிக்கை!

'பக்தனைப் போலீசார் கைது செய்தனர்

அகமதாபாத் மாவட்டத்தில், தானத் எனும் இடத்தில் ஒரு 'பக்தன்' தன் கழுத்தை அறுத்து, தலையை 'சங்கரனு'க்குக் காணிக்கையாக்கி, 'அவனைத் திருப்தி செய்து, 'அவன்' தரிசனம் பெறப் பேதமையான முயற்சியில் ஈடுபட்டபோது, அந்தப் பக்தனைப் போலீசார் கைது செய்து வழக்குத் தொடுத்திருக்கின்றனர்.

இந்தப் பாவி, தன் கழுத்தை சங்கரன் முன்பாக அறுத்துக் கொண்டிருக்கும்போது, விஷயமறிந்த கிராமவாசிகள் அவனை 'தற்கொலை' செய்துகொள்வதினின்றும் தடுத்துப் போலீசாரிடம் ஒப்படைத்தனராம்.

50 இலட்சம் பவுன் செலவில்!

செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவத் திட்டம்

டன்லப் இரப்பர் கம்பெனியும், பிரிட்டனில் டயர் உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து, சுமார் 50,00,000 பவுன்கள் செலவில், செயற்கை இரப்பர் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றன

இந்தத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 50,000 டன் செயற்கை இரப்பர் உற்பத்தியாகும்; இதனால் பிரிட்டனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3,00,00,000 டாலர்கள் மிச்சமேற்படலாமென மதிப்பிடப்படுகிறது.

'பறக்கும் குண்டு' தயாராகிறதாம்!

1,500 மைல் தூரத்திலுள்ள இலக்கைத் தாக்கக்கூடுமாம்!

"கப்பலிலிருந்து பிரயோகிக்கக் கூடிய 'ஜூபிட்டர்' என்னும் ஒரு பறக்கும் குண்டு தயாரிக்கப்பட்டுவருகிறது; இந்த ஆயுதத்தைப் பிரயோகம் செய்யக் கூடிய கப்பல், இலக்கின் அருகிலிருந்து இதைப் பறக்கவிட்டால், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் உள்ள கம்யூனிஸ்டு கிலப் பிரதேசங்களில் பத்தில் ஒன்பது பங்கில் உள்ள எந்த இலக்கையும் அக்குண்டு தாக்கிவிடும்.

"இந்தப் பறக்கும் குண்டு அணு முகமுள்ளது; 1,500 மைல் செல்லக்கூடியது; இந்த ஆயுதத்தைத் தற்பொழுது அமெரிக்க இராணுவ நிபுணர்கள் தயாரித்து வருகிறார்கள். இந்த அணுமுகக்குண்டை பிரயோகிப்பதற்குத் தகுந்த கப்பல்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆயுதத்தைப் பிரயோகிப்பதற்குத் தகுந்த ஆயுதங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

"கப்பலிலிருந்து பிரயோகித்தாலும், 'சப்மரீனி'லிருந்து பிரயோகித்தாலும், இந்தப் பறக்கும் குண்டு, அநேகமாகக் குறி தவறாமல், தனது இலக்குகளைத் தாக்கும்,"

என்று, அமெரிக்க செனட் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வாக்குமூலம் அளிக்கையில் அமெரிக்கக் கடற்படை நடவடிக்கைத் தலைவர் சார்பில் கூறப்பட்டுள்ளது

பாகிஸ்தானிலிருந்து சிமெண்ட் வாங்க!

இந்தியா மேற்கொண்ட [illegible]யற்சி தோல்வி!

[illegible]ராச்சி, ஜூலை 15—

தனது பற்[illegible] [illegible] போக்கிக்கொள்ளுவதற்காக, பாகிஸ்தானில் 'உபரி'யாக உள்ள சிமெண்டில் சுமார் 60 ஆயிரம் டன்வரை வாங்குவதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகள்தோல்வி யுற்றுவிட்டன என்று தெரியவருகிறது.

பாகிஸ்தான் கோரிய விலை மிகவும் அதிகம் என்று இந்தியா கருதியதினாலேயே, இந்தப்பேரம் நடைபெறவில்லை என்று பாகிஸ்தான வர்த்தக வட்டாரத்தினர் கருத்தறிவித்துள்ளனர்.

கைக்குத்தல் அரிசி

அபிவிருத்திக்கு நிதி உதவி

புதுடில்லி ஜூலை 15—

கைக்குத்தல் அரிசி, செக்குகள் ஆகியவற்றின் தொழில் அபிவிருத்திக்கு ரூ 38,57,000 அகில இந்திய கதர், கிராமத் தொழில் அபிவிருத்தி போர்டுக்குக் கடனுகவும மானியமாகவும் இந்திய சர்க்கார் அளித்துள்ளனர்.

கைக்குத்தல் அரிசி தொழில் அபிவிருத்திக்கு ரூ 18 இலட்சம் கடனுகவும், ரூ 17,64,000 மானியமாகவும் கிடைக்கும் — நெல்லை சேமிப்பு செய்வதற்கு ரூ. 15 இலட்சம் கடன் பயன்படுத்தப்படும்; மீதமுள்ள பணம் செக்கு போன்ற சாதனங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

கேளாதன கேட்கின்றோம்!

பனிமலைகளை உடைக்கும் 16,000 டன் எடையுள்ள அணு சக்தியால் இயங்கும் இயந்திரத்தை ரஷியா உருவாக்குகிறதாம்!

அணுசக்தியால் இயங்கும் இரயில் எஞ்சின்கள், விமானம் ஆகியவைகளும் கட்டப்படுகிறதாம்!

ரஷிய விமானம் மணிக்கு 1,000 மைல் வேகத்தில் செல்லக் கூடுமாம்!

பனி மலைகளை உடைக்கும் கப்பலானது, பல மாதங்கள்வரை எரி பொருளை மீண்டும் மீண்டும் நிரப்பவேண்டிய அவசியமில்லாமல் கடலில் இருக்குமாம்!

திமிங்கில வேட்டைக்கென தனிக் கப்பல்களைக் கட்ட முயற்சி நடைபெறுகிறதாம்!

300 டன் எடையுள்ள இரயில்வே எஞ்சின்கள் இனி உற்பத்தியாகுமாம்!

நவீன உபகரணங்களைக் கொண்டு தெருக் கூட்டும் இயக்கம்

புதுடில்லி, ஜூலை 15—

டில்லியின் பிரதான போக்குவரத்து மிகுந்த பகுதியான 'சாந்தினி சவுக்' எனும் இடத்தில், நவீன உபகரணங்களைக் கொண்டு தெருச் சுத்தம் செய்யும் இயக்கம் வேலை செய்யத் துவங்கிற்றும்.

உதவி சுகாதார மந்திரி திருமதி மரகதம் சந்திரசேகரன் தலைமையில், தொண்டர் குழு ஒன்று, நவீன துடைப்பங்களுடன் தெருக் கூட்டும் வேலையில் ஈடுபட்டதாம்.

சுகாதார மந்திரி இராஜகுமாரி அமிர்தகௌரி, இந்த இயக்கத்திற்கு, தனது க்ஷேம நல நிதியிலிருந்து, ரூ. 2,000 வழங்கியிருக்கிறாராம்.

இராணுவ அதிகாரி தூக்கிலிடப்பட்டார்

சாய்கோ (தென் வியட்நாம்) ஜூலை 13—

குவாங்வின் என்ற ஜெனரல் பா கட் இன்று தூக்கிலிடப்பட்டார். சுமார் 200 பேர்வரை, அவர் தூக்கிலிடப்படுவதைப் பார்த்திருக்கின்றனர்.

1948-க்குப் பிறகு தூக்கிலிடப்படும்முதல்இராணுவ அதிகாரிஇவர்தான். தென் வியட்நாம் குடியரசுத் தலைவராக தீன்தியெம் வந்த பின் தூக்குத் தண்டனை பெற்றவரும் இவர்தான்.

கடந்த 11 ஆண்டுக் காலமாக, ஜெனரல் பா கட், வியட்நாமின் மிகப்பிரபலமான இராணுவ அதிகாரியாக விளங்கி வந்திருக்கிறார்.

மனிதப் பண்பு வளர்ச்சியுருவிட்டால்!

'விஞ்ஞானத்தின் [illegible] சாதனைகளால் பலன் ஏற்படாது'

நைரோபி, ஜூலை 15—

"மனிதப் பண்பு வளர்ச்சிபெருவிட்டால், விஞ்ஞானத்தின் அரிய சாதனைகளால மக்களுக்குப் பலன் ஏற்படாமல் ஆபத்துதான் விளையும்,"

என்று, கிழக்கு ஆப்பிரிக்கா ராயல் டெக்னிகல் கல்லூரியில், காந்தியார் நினைவுப் பிரிவைத் திறந்து வைத்துப் பேசுகையில், இந்தியாவின் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

"இனத் திமிரையும், ஒரு இனம் மற்றொரு இனத்தைவிட உயர்ந்தது என்ற வாதத்தையும் எதிர்த்துப் போராடிய ஆப்பிரிக்காவில், காந்தியார் பெயரால் ஒரு கல்லூரி திறப்பது மிகப் பொருத்தமேயாகும்" என்று அவர் கூறினார்.

லசபதிராய் போராடியது அடக்குமுறை ஆட்சிக்காகவா?

காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை காட்டட்டும்

பிறகு நாட்டுக்கு ஒற்றுமை உபதேசிக்கலாம்

ஒசியார்பூர் சம்பவங்கள் குறித்த கருத்துக்கள்

"இப்போது பஞ்சாப் மாகாணத்தில் அடக்குமுறை ஆட்சி நிலவிவருகிறது. செய்தித் தாள்களுக்குச் சுதந்திரம் கிடையாது. அரசாங்கத் தணிக்கையாளர்களால் அனுமதியளித்த செய்திகள் மட்டும் வெளியிடப்படுகின்றன. மண்டலக் குழு அமைப்புக் கொள்கையை ஒப்புக்கொள்ளாத காங்கிரசுக் காரர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சட்ட சபைக் காங்கிரஸ் உறுப்பினர்களுள் அறிவுத் துறையில் சிறப்பு வாய்ந்தவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஓர் அவல நிலையைக் காட்டுகின்றன. சுதந்திர இந்தியாவிற்காகப் பாடுபட்ட பஞ்சாப் சிங்கம் என்னும் லாலா லசபதிராய், இதுபோன்ற அடக்குமுறை ஆட்சி மாகாணமுள்ள இந்திய விடுதலைக்காகவா போராடினார்?

"ஒசியார்புரி நிகழ்ச்சிகள் சில உண்மைகளை வற்புறுத்துகின்றன. பஞ்சாப் அரசாங்கத்தின் போக்கிற்கும்—பொது மக்கள் கருத்திற்கும் முரண்பாடான தொடர்புதான் இருந்து வருகிறது. அரசாங்கத்தின்பால் சில குற்றங்களாவது இருக்கின்றன என்று உணர்ந்த பின்பே, காங்கிரசின் தலைவர் விசாரணைக் குழுவை அமைத்தார். அவ்விசாரணையை, மௌலானா ஆசாத் தள்ளி வைத்ததன் மூலம், அக்குற்றங்களை மழுப்புவதற்கு ஒரு முயற்சி நடைபெறுகிறதென்று புலப்படுகிறது. காங்கிரசின் அமைப்பிற்குள்ளும், மேலிடத் தலைவர்களுக்குள்ளும் ஒற்றுமையின்மை இருப்பதை முதலில் நீக்கிக்கொண்டு, பிறகு நாட்டின் ஒற்றுமையைக் குறித்துப் பேசுவதே சிறந்ததென்று கருதுகின்றோம்."

—என்று, 'அடக்குமுறை ஆட்சி' என்ற தலைப்பில், 13—7—56 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"சென்ற மாதம் ஜுன் 13, 17-ந் தேதிகளில், பஞ்சாப் மாகாணத்தின் நடுப் பகுதியிலுள்ள ஒசியார்பூரில் நடைபெற்ற கலவரத்தின் போது, ஊர்க்காப்பாளர்கள், அளவுக்கு மீறிய வன்செயல்களில் ஈடுபட்டார்களென்றும், இளைய பஞ்சாப் அரசினரால் தூண்டப்பட்டு, எதிர்க் கட்சியினரை ஒடுக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

"காங்கிரசுக் கட்சியின் அரசாங்கக் கொள்கையாகிய மண்டலக் குழுத் திட்டத்தை காங்கிரசல்லாத கட்சியினரும், சிறப்பாக மகா பஞ்சாப் சமிதி என்ற அரசியல் அமைப்பைச் சேர்ந்தவர்களும் எதிர்த்துவருகிறார்கள். இரு சார்பினர்களும் வெளியிலிருந்து கலகக்காரர்களைக் கொண்டுவந்து தத்தம் கட்சிக் கொள்கைகளுக்கு ஆதரவு தேட முயற்சி செய்தார்களென்று தெரிகிறது.

"முக்கியமாக, ஜுன் 17-ந் தேதியன்று குழுமியிருந்த மா[illegible] கூட்டத்தில், ஊர்க்[illegible]ளர்கள் புகுந்து மக்[illegible] அடித்தனமாகத் [illegible] அடித்ததாகத் [illegible]றது. அக்கூட்டத்தில் [illegible]மான பெண்களும், குழந்தைகளும் இருந்ததாகவும், பெண்களில் பலர் ஒழுங்கீனமாக நடத்தப்பட்டதாகவும் எதிர்க் கட்சியினர் கூறியிருக்கிறார்கள்.

"சட்டத்தின் பெயரில் இத்தகைய ஒழுங்கீனங்களும், முரட்டுத்தனமான செயல்களும் நடைபெற்றுள்ளதை விசாரணை செய்வதற்கு ஒரு நடுவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்கள் வேண்டுகோள்.

"இக் குற்றச்சாட்டில் அரசினரும் பங்கு கொண்டிருப்பதால், அரசாங்க விசாரணை நேர்மையுடன் நடைபெறாதென்றும், ஆகையால் நீதிமன்ற நடுவரே விசாரணை செய்ய வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

"காங்கிரசு அரசாங்கத்தின் துணை அமைச்சர் ஒருவரே வெளியிலிருந்து கலகக்காரர்களை அழைத்துப் பொருள் கொடுத்து, கலகம் செய்யும்படி தூண்டியதாக மகாப் பஞ்சாப் சமிதி தெரிவித்திருக்கிறது.

"இக்குற்றச் சாட்டுக்கள் அனைத்திற்கும் காங்கிரசின் தலைவராகிய திரு. தேபருக்குப் பெருங் கவலையைத் தோற்றுவித்தது. உடனே காங்கிரசின் பொதுச்செயலாளராகிய திரு. ஸ்ரீமந்நாராயணன் இதைக் குறித்து விசாரணைசெய்ய வேண்டுமென்று அவர் கட்டளையிட்டார்.

"பெண்கள் ஒழுங்கீனமாக நடத்தப்பட்டார்கள் என்பது குற்றச்சாட்டுகளில் ஒன்றாகையால், திரு. நாராயண் விசாரணைக்கு உதவியாக திருமதி இராமேசுவரி நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வம்மையார், இவ்விசாரணையில் கலந்துகொள்வதற்கு இணங்காததால், டில்லியிதான் சபைத் தலைவராகிய டாக்டர் சுசீலா நாயரும், பெப்சு மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு சகன்னாத கௌசலும் துணை விசாரணையாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

"இந்நியமன அறிவிப்பு சென்ற ஜுன் 25-ந் தேதியன்று வெளியிடப்பட்டது; ஆனால், இவ்விசாரணை முறையைப் பஞ்சாப் காங்கிரசல்லாத தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரசு அரசாங்கத்தின் மேல் சாட்டப்பட்ட குற்றங்களை, காங்கிரசுக்காரர்கள் விசாரணை செய்வது நேர்மைக்கு மாறானதென்றும், மேலும் அரசாங்க அதிகாரமில்லாத விசாரணையாளர்கள் மாவட்ட அரசாங்க அதிகாரிகளை அழைத்துச் சான்று கூறும்படி கட்டளையிடுவது, ஒழுங்கானதல்ல என்றும் கூறப்பட்டது.

"இதற்குப் பிறகு, ஜுலை 1-ஆம் தேதியன்று திரு. ஸ்ரீமந்நாராயண் தாம் கட்சி சார்பற்ற முறையில் பொது நோக்குடன் விசாரணை செய்யப் போவதாகவும், தம்முடன் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறிவிட்டு, ஒசியார்புரிக்குப் புறப்பட ஆயத்தமானார். அவர் புறப்படுவதற்குச் சில மணி நேரங்களுக்குமுன், உடனடியாகத் தொடங்கவிருந்த அவ்விசாரணை தள்ளிவைக்கப்பட்டிருக்கிறதென்று புதுடில்லியிலிருந்து மௌலானா ஆசாத் தெரிவித்துவிட்டார். காங்கிரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் சார்பாக இம்மாறுதல் அறிவிக்கப்பட்டது.

"காங்கிரசுத் தலைவர் திரு தேபருடைய கட்டளையை மௌலானா ஆசாத் மாற்றியிருப்பது மேலிடத் தலைவர்களிடையேயுள்ள கருத்து வேறுபாட்டை நன்கு காட்டுகிறது. காங்கிரசுக் கட்சியின் பொது நோக்குள்ள மனப்பான்மையை மக்களுக்கு விளக்க வேண்டுமென்பது திரு. தேபரின் கருத்து; ஆனால், பஞ்சாபிலுள்ள காங்கிரசுக் கட்சி அரசாங்கத்தின் மதிப்பைக் காப்பாற்ற வேண்டுமென்பது மௌலானா ஆசாத்தின் குறிக்கோள். இதனால்தான் விசாரணை தொடங்குவதை அவர் தடைப்படுத்திவிட்டார்."

தண்ணீர், சுகாதாரத் திட்டங்களுக்கு உதவி

மத்திய சர்க்காரால் ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்!

புதுடில்லி, ஜுலை 15—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தேசியத் தண்ணீர் விநியோகச் சுகாதார திட்டங்களின் கீழ் கடன், மான்யம் சம்பந்தமாக மாநிலங்கள் அனுப்பியுள்ள கோரிக்கைகளை மத்தியசர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனர்; எல்லா மாநிலங்களுக்கும் மொத்தம் ரூ 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி,—தொழில், நுணுக்கக் காரர்கள், சாதனங்கள் ஆகியவைகளின் தட்டுப்பாடு காரணமாக முழு அளவுக்குச் செலவிடப்படவில்லை

வட்டி விகிதத்தை $4\frac{1}{2}$ சதவிகிதத்திலிருந்து குறைக்க வேண்டுமென்று மாநிலங்கள் கோரின; அக்கோரிக்கையை மத்திய சர்க்கார் நிராகரித்துவிட்டனர்.

அமெரிக்கா-இந்தியா பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் சாதனங்களை தருவிக்க இந்திய சர்க்கார் முயற்சித்து வருகின்றனர்.

கல்கத்தா சுகாதாரக் கழகம் சென்னை, ரூர்கி எஞ்சினீயரிங் கல்லூரிகளில் தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கப்படும்; இவைகளில் பயிற்சி பெறுவதற்கு மாநிலங்கள் அனுப்பும் நபர்களுக்கு மத்திய சர்க்கார் உபகாரச் சம்பளமளிக்கும்.

கட்டிடச் செலவுக்காக சென்னைக்கும், உத்திரப் பிரதேசத்துக்கும் தனியாக மானியமளிக்கப்படும்; இதற்காக சுமார் ரூ 50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முழு விவரங்களை அனுப்பிவைக்கும்படி மாநிலங்களை மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறது. நிதி ஒதுக்குதலை துரிதப்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

அளிக்கப்படும் நிதியை துரிதமாக ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் அனுப்பிவைக்கும்படி மாநிலங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

அகாலி தளத்தைக் காங்கிரசுடன் இணைத்துவிட முயற்சித்தோர்!

இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்!

அமிர்தசரஸ், ஜுலை 15—

அகாலி தளத்தை காங்கிரசுடன் இணைத்துவிட முயற்சித்தவர்களுக்கு தக்க தண்டனை தரப்பட்டிருக்கிறது

சர்தார் கியான் சிங் ரேர்வாலா, சர்தார் போபிந்தர் சிங் மான் திவான், சர்தார் கர்தார் சிங் [illegible] சிங், சர்[illegible] ஆகிய ஐந்து பிரபல தலைவர்களும் அகாலி தளத்தைக் காங்கிரசுடன் இணைத்து அழித்துவிட முயற்சித்ததாயும், அகாலி தளத்திற்குத் துரோகமிழைத்ததாயும் குற்றஞ் சாட்டப்பட்டு, சிரோமணி அகாலி தளத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

உடனடியாக ரத்து செய்யத் தீர்மானம்

ஐ. சி. எஸ். அதிகாரிகள் பெற்று வரும் சிலசலுகைகளுக்கு 'முடிவு'

1924-ம் வருடத்திற்கு முன் நியமனம் பெற்ற பழைய ஐ சி. எஸ். அதிகாரிகள் அனுபவித்து வரும் சில சலுகைகளை உடனடியாக ரத்து செய்ய இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

மாறியுள்ள நிலைமையில், இந்தச் சலுகைகள், தேசிய முரணானவை என்பதால் இவை ரத்து செய்யப்படுவதாகத் தெரிகிறது.

பிரயாண வசதிகள், வெளிநாட்டுச் சம்பளம், ஓய்வில் வெளிநாடு சென்றிருக்கும்பொழுது சம்பளத்தைப் பவுனில் வாங்குவது முதலியவை ரத்து செய்யப்படும் சில சலுகைகளாகும்.

மின் ஆற்ற[illegible]பெற்ற கிருமி நாசினி!

செலவில் சிக்கனமும், நல்ல பலனும் ஏற்படுகிறதாம்!

நோய் பற்றியுள்ள செடிகள்மீது தெளிக்கும் கிருமி நாசினித் தூளுக்கு மின் ஆற்றலூட்டுவதால் சிறந்த பலனேற்படுவதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மின் ஆற்றலூட்டப்பட்ட தூள்கள் இலைகள்மீது ஏற்றத் தாழ்வின்றி பரவலாக விழுந்து நன்றாக ஒட்டிக்கொள்கின்றன; இதனால் சேதாரம் குறைகிறது; செலவில் சிக்கனமும், நல்ல பலனும் கிடைக்கிறது.

கிருமி நாசினித் தூளை வலிமை வாய்ந்த மின் ஆற்றல் குழாய் மூலம் செலுத்தும்போது ஒவ்வோர் இம்மியிலும் நேர்மின்சாரம் பற்றிக் கொள்கிறது. செடிகளில் எதிர் மின்சார ஓட்டமிருப்பதால், தூள்கள் இலைகளின் பரப்பில் விழும் போது நன்றாகப் பற்றிக் கொள்கின்றன.

மின்ஆற்றலூட்டப்பட்ட கிருமி நாசினிகளை வியாபார ரீதியில் உற்பத்தி செய்ய ஓர் பிரிட்டிஷ் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது

அணு ஆயுதப் போர் மூண்டால்!

மத்தியதரைக் கடலில் அமெரிக்க 6-வதுகடற்படைபோர்நடத்துமா?

வாஷிங்டன், ஜுலை 15—

"போர் மூண்டால் அமெரிக்கக் கடற்படைகளுக்கு, நாம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தெரியும்; அணு ஆயுதப் போர் ஏற்பட்டால், அமெரிக்க 6-வது கடற்படை மத்தியதரைக் கடலில் தங்கி போர் நடத்தும்,"

என்று, அமெரிக்க செனட் குழு உறுப்பினர்கள் முன்னிலையில், அமெரிக்க அட்மிரல் கூறியுள்ளார்.

"போர்க் காலத்தில் தென் ஐரோப்பாவில் உள்ள கம்யூனிஸ்டு விமானப் படைத் தளங்களை அழிப்பதே, மத்திய தரைக் கடலில் உள்ள 6-வது அமெரிக்கக் கடற்படையின் முக்கிய பொறுப்பாக இருக்கும்"

என்று, அமெரிக்க விமானப்படை—கடற்படை பிரிவின் துணைத் தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

100 அறிஞர்கள் கலந்துகொண்ட சரித்திர ஆசிரியர் மாநாடு

தெற்கு-தென்கிழக்கு ஆசியா நாடுகளில், சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி ஆராய இம்மாதம் முதல் வாரத்தில், பல நாட்டுச் சரித்திர அறிஞர்கள், லண்டனிலுள்ள கீழ்த்திசை கலை-மொழி கல்லூரியில் கூடினர்.

இப்போது, தெற்கு — தென்கிழக்கு ஆசியாவில் பல நாடுகள் சுதந்தரம் பெற்றுள்ளன; இந்த நாடுகள் தம் தம் வரலாற்றைத் தொகுத்து வெளியிடும் பணியில் முனைந்திருப்பதால், கூட்டு முயற்சியால் சிறந்த பலனைக்காணும் நோக்கத்துடன் இந்த மாநாடு கூட்டப்பட்டது. சுமார் 100 அறிஞர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

ஆதாரபூர்வமான தொகுப்புக்கு ஏற்பாடு செய்வதே, மாநாட்டின் அடிப்படை நோக்கம். இந்திய வரலாற்றில் 1800-ம் ஆண்டு முதல் 1850ம் ஆண்டுவரையுள்ள நிகழ்ச்சிகளையும், தென்கிழக்கு ஆசியாவின் 19—ம் நூற்றாண்டு நிகழ்ச்சிகளையும் ஆராய்வது, நிரலிலுள்ள ஓர் அம்சம்.

இந்தியா, பர்மா, இலங்கை பாகிஸ்தான், இந்தோனேஷியா, ஜப்பான், மலேயா முதலிய நாட்டுப் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

பிறப்பு

வடசென்னை 'சற்குண ஷேப்' உரிமையாளர் எஸ். பி. சாமியின் மகளும், தோழர் ஏ. எஸ். எஸ். துரைசாமி அவர்களின் துணைவியாருமான தோழியர் இராஜேசுவரி அம்மையார் 5—7—56ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானார்கள். தாயும் சேயும் நலம் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

12—7—56 மாலை 7 மணிக்கு திருச்சி மாவட்டம், சிங்காரத்தபுரத்தில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் எம் எஸ். மணி அவர்கள், தோழர் வி. சங்கம் அவர்களுடைய பெண் மகவுக்கு 'தமிழரசி' எனப் பெயரிட்டார். அதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

சிங்காரத்தபுரம் தோழர் ஆறுமுகம் அவர்களுடைய பெண் மகவுக்கு பூங்கோதை' எனப் பெயரிட்டார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது.

சிங்காரத்தபுரம் தோழர் அருணாசலம் அவர்களுடைய ஆண்மகவுக்கு 'செங்குட்டுவன்' எனப் பெயரிட்டார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்குரூ1. நன்கொடை தரப்பட்டது.

(நன்கொடைத் தொகைகள் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.)

திருமணம்

அக்காமலை எஸ்டேட் தோழர் பி. கே. ராமசாமி அவர்களது இல்லத்தில், அவருடைய சகோதரியாரின் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பல கழகத் தோழர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண விழாவை முன்னிட்டு 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது. வரப்பெற்றோம்-நன்றி - பொறுப்பாளர்.

* * *

சிங்காரத்தபுரம் தோழர் கே. வைத்திலிங்கம் — தோழியர் தெய்வயானை திருமணம், தோழர் எம். எஸ். மணி தலைமையில், 12—7—56 காலை 10 மணிக்கு நடைபெற்றது இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்-நன்றி—பொறுப்பாளர்.

மு. கருணாநிதி முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திறவவேண்டும்' என்று கோருவது, கழகத்தில் உள்ள சிலருக்கு பதவிகள் வேண்டும்—பட்டங்கள் வேண்டும் என்ற அத்தகைய அற்பத்தனமான ஆசைகளுக்காக அல்ல!

"இந்த நாட்டில் வளமில்லை; மக்களுக்கு வாழ்வில்லை; வாழ விரும்புவோருக்கு வாழ வகை இல்லை; இந்த நிலை ஏன்? இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வு ஏன் கிடையாது?—என்று நாம் கேட்டிருக்கிறோம். நாம் கேட்டதற்கு, 'வேட்டுச் சத்தத்தை'த்தான், இந்த நாட்டு ஆட்சியாளரிடமிருந்து பதிலாகப் பெற்றிருக்கிறோம்.

"வாழ்வு ஏன் இல்லை என்றால், 'இந்த நாடு இந்த நாட்டவருக்கு உரியதாக இல்லை; அடிமைக்காடாக இருக்கிறது; அதனால்தான், நாட்டவருக்கு வாழ வகை இல்லை. வாழ வகை கிடைக்க நம் தாயகம் நமக்காக வேண்டும்; திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்'—என்று நாம் எடுத்துக் கூறுகிறோம்.

"தி. மு. கழகம், சில அரசியல் சூதாடிகளால் திடீரென ஆக்கப்பட்டதல்ல; தி. மு. கழகத்தில் உள்ளவர்களில் பெரும்பான்மையோர்—100-க்குத் தொண்ணூறுபேர், திராவிடர் கழகத்திலிருந்தவர்கள்தான்; அப்படி, கடந்த 30 ஆண்டுக் காலமாக நாம் விதைத்த உணர்ச்சி வித்துக்கள்தான், இன்று, தி. மு. கழகம் என்ற மாபெரும் சக்தியாக வளர்ந்திருக்கின்றனவே தவிர, வேறல்ல!

"அன்று நாம்—திராவிடர்கள்—ஒரு பெரும் வல்லரசாக வாழ்ந்தோம்; இன்று, தேரையாகத் தேய்ந்து கிடக்கிறோம். என்றாலும், நமக்கு உரிய நமது போர்க்குணம் மாறாமலிருப்பதைக் காண்கிறோம். பழைய பெருமைக்குரிய போர்க்குணம் கொண்ட நாம், மீண்டும் முன்போல, இழந்துவிட்ட உயரிய வாழ்வைப் பெறுவதற்காகத்தான் போராடுகிறோம்.

"நம் நாடு என்ன, வளமற்ற நாடா? நம் நாட்டின் வளமான நிலத்தின் மேலே நெல் விளைகிறது! கீழே, தங்கம் கிடைக்கிறது! நமது நாட்டுக் கடல்கள் முத்துக்களை வழங்குகின்றன!

"இப்படி வளமுடைய நாட்டு மக்கள், கூனிப்போய், குறுகிப்போய், குருடர்களாய் ஏன் வாழ்விழந்து வாடவேண்டும்?—என்ற கேள்வியின் அடிப்படையாகப் பிறந்ததுதான், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோஷம்—என்ற எழுச்சி முழக்கம்! நாம் இந்த இலட்சியத்தை என்றென்றைக்கும் கைவிடமுடியாது; எதற்காகவும் விட்டுவிட முடியாது!

"நமது மூச்சு, நமது பேச்சு, நமது அசைவு அத்தனையும், 'திராவிடம்—திராவிடம்—திராவிடம்' என்றே சொல்லிக்கொண்டிருக்கின்றன!

"நாம், நமது திராவிடத்தின் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நேரத்தில், உலகில் சின்னஞ்சிறு தேசங்கள் எல்லாம், விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

"அல்ஜீரியா என்ற ஒரு தேசம்; அந்த தேசத்தை அடிமைகொண்டுள்ளது பிரான்சு! அடிமைகொண்ட நிலையிலும், அல்ஜீரிய மக்களுக்கு எத்தனையோ வசதிகளைச் செய்து தந்திருக்கிறது, பிரான்சு! என்றாலும், வசதிகள் பல வழங்கப்பட்டிருந்தாலும்—நன்மைகள் செய்யப்பட்டிருந்தாலும், அல்ஜீரியா கோரும் விடுதலையின் நியாயம் குறைந்துவிடவில்லை—என்று 'சுதேசமித்திரன்' இன்று எழுதியிருப்பதைக் காண்கிறோம்.

"இங்கே நமக்கு வசதிகள் வழங்கப்படவில்லை; நன்மைகள் செய்யப்படவில்லை; அங்கே—அல்ஜீரியாவில் அவை நடைபெற்றுள்ளன; என்றாலும், 'விடுதலைக் கோரிக்கை நியாயமானதே' என்கிறது, 'சுதேசமித்திரன்'.

"நமக்கு வசதிகள் வழங்கப்பட்டாலும் ... செய்யப்பட்டாலும், நமது விடுதலை உணர்ச்சியைத் தடுத்துவிட முடியாது என்று கூற விரும்புகிறோம்.

"சிங்கப்பூருக்கு சுதந்திரம் பெற முடியாது போனமையால், 'இதோ, பதவியை இராஜினமாச் செய்கிறேன்' என்று அந்த நாட்டு முதன் மந்திரி டேவிட் மார்ஷல், பதவியை வீசி எறிந்திருக்கிறார்! செய்தி, நமது சிந்தையை இனிக்கச் செய்கிறது!

"நாகர் பெருமக்கள் காட்டுமிராண்டிகள்தான்—நாகரிக மற்றவர்கள்தான்; என்றாலும், விடுதலைகோரி கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"உலகிற்கெல்லாம் உபதேசம் செய்யும் பண்டிதர்—'சமாதான வெண்புறா'வைக் கையிலேந்தியிருக்கும் நேரு பெருமான், நாகர்களின் போராட்டத்தை அடக்க என்னவெல்லாம் செய்கின்றார், தெரியுமா?

'நாக நாட்டு மக்களின் தலைவனான பிசோவின் தலையைக் கொண்டு வந்து தருவோருக்கு, 5,000 ரூபாய் பரிசு தரப்படும்—என்று அறிவித்திருக்கிறது நேரு சர்க்கார்!

"நேரு சர்க்கார், விடுதலைக்குத் தரும் மதிப்பு இது!

"விடுதலைத் தாகம் எப்படிப்பட்டது? சுதந்திர உணர்ச்சி எத்தகையது?—என்பதை அறியாதவர்களா இந்த ஆட்சியாளர்கள்?

"வெள்ளையரிடமிருந்து விடுதலைக்காகப் போராடியவர்கள் தானே இவர்கள்?

"வெள்ளையரை எதிர்த்துப் போராடிய விடுதலை வீரனாக—சுதந்திரக் கனல் எழுப்பும் சுந்தரனாக இருந்த நேரு, 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாளன்று, 'மாண்டே' போனார்!

"இப்போது உள்ள நேரு, அதிகார நேரு—அடக்குமுறை நேரு!

"ஆகவேதான், 'அந்த நேருவின் அக்கிரமங்களைத் தாங்கிக்கொண்டு வாழ முடியாது நம்மால்' என்கிறோம்! 'நமது நாடு நமக்காக வேண்டும்' என்கிறோம்!"

—என்று தோழர் மு. கருணாநிதி அவர்கள் 15—7—56 மாலை, சேப்பாக்கத்தில் நடைபெற்ற மும்முனைப் போராட்ட நினைவுநாள் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்; அவரது பேச்சு முடியவில்லை தொடர்ந்து வெளிவரும்.

கழகக் கூட்டம்

★

திருக்களாச்சேரி:
அழகிரி சதுக்கத்தில்
18—7—56 மாலை 6-மணிக்கு
தலைவர்:
சி. ஐம்பு
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

குறிப்பு: மாலை 4-மணிக்கு, திருக்களாச்சேரி பஞ்சாயத்து போர்டு, ஆயப்பாடியிலுள்ள பஞ்சாயத்துப் பணிமனையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும்.

★

எருக்கட்டாஞ்சேரி:
19—7—56 மாலை 6-மணிக்கு
பேசுபவர்:
கி. மனோகரன்

★

ஆலப்பாக்கம்:
தி. மு. கழகத் துவக்க விழா
19—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஆ. பொ. கெங்கப்பன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஆர். எஸ். பாண்டியன்
சத்தியவாணிமுத்து

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

18—7—56 மாலை 6 மணிக்கு சென்னை 11-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையில், தோழர் அ. தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெறும் கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

கும்முடிபூண்டி தி. மு. க. 4-ம் ஆண்டுவிழா

மேற்படி ஆண்டு விழா, தோழர் எ. இராதாமணாளன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, ஆ. பெ. கணேசன், ஆ. கிருஷ்ணன், இ. எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

(தேதி குறிப்பிடப்படவில்லை)

பம்பாய் பற்றிய முடிவில் மாற்றமில்லை

மசோதாவும் பெரும் திருத்தத்திற்கு உட்படவில்லை

கூட்டுப் பொறுக்குக் குழுவின் முடிவுகள்

புதுடில்லி, ஜூலை 16—

மாநில சீரமைப்பு மசோதாவிலுள்ள எல்லா முக்கிய முடிவுகளும் அது சம்பந்தமான அரசியல் திருத்த மசோதாவிலுள்ள அம்சங்களும் கூட்டு தனிக் கமிட்டி அறிக்கையில் அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

பம்பாய் நகரம் சம்பந்தமாக மாநில சீரமைப்பு மசோதாவில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு நீடிக்க வேண்டுமென்று, மசோதாவைப் பரிசீலனை செய்த கூட்டு பொறுக்குக் குழு, சிபாரிசு செய்துள்ளது.

குழுவின் அறிக்கை இன்று மக்கள் சபையில் வைக்கப்பட்டது.

சென்ற ஜூன் 3-ந் தேதி பிரதமர் நேரு பம்பாயில் வெளியிட்ட அறிக்கைக்கிணங்க 5 வருடத்தில் பம்பாய் பிரச்சினை மறுபரிசீலனை செய்யப்படுமென்று குழு சமர்ப்பித்துள்ள விளக்க அறிக்கை கூறுகிறது.

ஆந்திராவுடன் தெலிங்கானாவை இணைப்பதன் மூலம் ஏற்படும் புதிய மாநிலத்திற்கு 'ஆந்திரா' என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், மசோதாவில் உள்ளபடி 'ஆந்திரா-தெலிங்கானா' என்று பெயரிட வேண்டியதில்லையென்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மசோதாவின் 31-வது பிரிவை, குழு திருத்தி, புதிதாக ஏற்படும் மகாராட்டிர மாநிலத்திற்கு மேல் சபை ஏற்படுத்த வசதி செய்துள்ளது; இந்த மேல்சபையில் 70 உறுப்பினர்கள் இருப்பர்.

ஆந்திரா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மேல்சபை அமைக்கும் பிரச்சினை, அந்த மாநிலங்களின் முடிவுக்கே விடப்பட்டுள்ளது.

மசோதாவுடன் 10 ஆட்சேபக் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தனி மாநில குழுவின் சிபாரிசு ஒப்புக்கொள்ளப்பட்டால், புது ஆந்திர மாநிலத்திலுள்ள ஆந்திரப் பிரதேசத்துக்கு 1962-ல்தான் தேர்தல் நடைபெறும். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி 1960-ல் தேர்தல் நடைபெற வேண்டும்.

2,25,000 பம்பாய் ஆலைத் தொழிலாளருக்கு ரூ. 2 கோடிவரை போனஸ்

பம்பாய், ஜூலை 16—

பம்பாய் ஆலைச் சொந்தக்காரர்கள்—தொழிலாளர் சங்கங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஐந்தாண்டு 'போனஸ்' ஒப்பந்தப் பிரிவுகளின்படி, 1954-ம் ஆண்டிற்கு பம்பாய் ஆலைத் தொழில்களில் பணியாற்றும் 2,25 000 தொழிலாளர்களுக்கு ரூ. 2 கோடி 'போனசாக' வழங்கப்படும்.

16 மில்கள், ஓரிலட்சம் தொழிலாளர்களுக்கு 3 மாத அடிப்படைச் சம்பளத்தையும், நஷ்டம் ஏற்பட்ட 30 மில்கள் 15 நாள் அடிப்படைச் சம்பளத்தை 75-தொழிலாளர்களுக்கும், எஞ்சியுள்ள ஆலைகள் ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி உயர்ந்த பட்ச-குறைந்த பட்ச வரையறைகளுக்கு இடையே பல்வேறு வகையிலும் போனசாக அளிக்கும்.

புல்லம்பாடி கால்வாய் திட்டத்திற்கு அனுமதி

சென்னை, ஜூலை 16—

திருச்சி மாவட்டத்தில, புல்லம்பாடி கால்வாய்த் திட்டத்திற்காக ரூ. 1,42,00,000 செலவிட சென்னை சர்க்கார் சம்மதித்துள்ளார்கள்.

காவேரியின் வடகரையிலுள்ள பெருவளைக் கால்வாய் பிரியும் இடத்தில் ஒரு மதகு கட்டப்படும்; 54 மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டப்படும்; 8 புதிய குளங்கள் நிறுவப்படும்; ஏற்கனவேயுள்ள 24 குளங்கள் மராமத்து செய்யப்படும்.

லால்குடி, உடையார்பாளையம் தாலுகாக்களில் 22 114 ஏகரா நிலங்களுக்கு இதன் மூலம் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

சரோஜினி—ராஜா வாழ்க்கை ஒப்பந்தம்

அண்ணா தலைமையில் சிறப்பான நிகழ்ச்சி

சென்னை, ஜூ. ...

சென்னை சட்டசபை உறுப்பினர் திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களது செல்வி டி. எஸ் சரோஜினி—செல்வன் எம். ராஜா வாழ்க்கை ஒப்பந்தம், 15—7—56 காலை 9 மணியளவில், திருவொற்றியூரில், மணமகன் இல்லத்தில் அண்ணா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டதுடன், மோதிரம் அணிவித்தும், உறுதிமொழி மேற்கொண்டும் துணைவர்களாயினர்.

சீர்திருத்த மணம் புரிந்துகொண்ட மணமக்களை வாழ்த்தி டாக்டர் பி. வரதராசுலு, எம். எல். ஏ., வி. வி. இராமசாமி எம். எல் சி., ப. ஜீவானந்தம் எம். எல் ஏ. அ. பொன்னம்பலனார், கே. கே. நீலமேகம், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

ஏராளமான பரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் மணமக்களுக்கு அளிக்கப்பட்டன.

திருமணத்தில் பல சட்டசபை உறுப்பினர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

'மணமக்கள் வாழ்க' என்ற மங்கல வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

மாலையில், திருமணத்தை ஒட்டி, தோழியர் சாவி—சுப்புலட்சுமி ...ழுவினரால் சிறப்பானதோர் விருந்தும் நடைபெற்றது.

நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம்

ஆந்திர சர்க்கார் 1,75,000 ஏகர் நிலம் ஒதுக்கித் தந்துள்ளதாம்!

கர்னூல், ஜூலை 16—

ஆந்திர மாநிலத்தில் உள்ள நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு, சுமார் 1,75,000 ஏகர்வரை நிலம் இலவசமாக ஒதுக்கித் தரப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

பயிரிடக்கூடிய தரிசு நிலமாக ஆந்திர சர்க்கார்வசம் ஆறுமுதல் எட்டு இலட்சம் ஏகர் வரை இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

தியாகிகள் சுமார் 6,000 பேர், நிலமானியம் கோரி மனுச் செய்திருந்தார்களாம்; இதில் 50 சதவிகித மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டுவிட்டனவாம்; எஞ்சிய மனுக்கள் பலவும், ராயலசீமா பகுதிகளிலிருந்து வந்தவை என்று கூறப்படுகின்றது.

காரைக்குடியில் குறள் விழா

★

காரைக்குடி திருக்குறள் கழகத்தின் சார்பில், ஜூலைத் திங்கள் 21, 22—சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் குறள் விழா நடைபெறும்.

ஜூலை 22-ந் தேதியன்று, அண்ணா, கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.